வீடியோ கமரா,
V. V. வீடியோ டெக்
ஆகியவற்றை
உத்தரவாதத்துடன்
உடனுக்குடன்
திருத்திக் கொள்வதற்கு
எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

உங்கள் இல்லங்களில்
நிகழும்
மங்கள நிகழ்வுகளின்
நவீன முறையில் வீடியோ
படப்பிடிப்பிற்கு
எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 05 புதன்கிழமை (21 - 09 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 298

திங்கள் நள்ளிரவு கடற்புலிகள் படைத்த வீரகாவியம்

கற்பிட்டி கடலில் போர்க் கப்பல் தாக்கி மூழ்கடிப்பு!

33க்கும் மேற்பட்ட கடற்படையினர் உயிரிழப்பு!!

2பெண் கடற் கரும்புலி உட்பட 4 கடற்கரும்புலிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 21

கற்பிட்டி கடற்பரப்பில் — சிலாவத்துறையில் இருந்து 15 மைல் தொலைவில் — ஸ்ரீலங்கா கடற்படையின் பாரிய போர்க் கப்பல் ஒன்றை கடற் கரும்புலிகளும், கடற்புலிகளும் இணைந்து தாக்கி, தகர்த்து கடலில் மூழ்கடித்தனர்.

கடந்த திங்கள் நள்ளிரவு இத்துணிகரத் தாக்குதலை நடத்தியதன் மூலம் கடற்புலிகள் அணி மற்றொரு வீரகாவியத்தைப் படைத்திருக்கிறது.

இத்தாக்குதலில் அதிகாரிகள் உட்பட 33 க்கும் அதிகமான சிங்களக் கடற்படையினர் உயிரிழந்தனர். கப்பலைத் தகர்க்கும் சாதனையின் போது பெண் கடற் கரும்புலிகள் இருவர் உட்பட நான்கு கடற் கரும்புலிகள் வீரச்சாவடைந்தனர்.

இரு படகுகளில் சென்ற நான்கு கடற் கரும் புலிகளே நேற்று முன்தினம் நள்ளிரவு 11-25 மணியளவில் "சாகரவர்த்தனா" என்ற இந்தக் கப்பல் மீது கரும்புலித் தாக்குதலை நடத்தினர். இத்தாக்குதலை அடுத்து போர்க் கப்பல் மீது கடற்புலிகளும் தாக்குதலைத் தொடர்ந்தனர்.

இத்தாக்குதல் நேற்று அதிகாலை 12-30 மணியளவில் போர்க் கப்பல் கடலில் மூழ்கியது. (6 ஆம் பக்கம் பார்க்க)

330 தொன் 'சாகரவர்த்தனா' 1மணி நேரத்தில் மூழ்கியது

நேற்று முன்தினம் இரவு கடற்கரும்புலிகளால் மூழ்கடிக்கப்பட்ட "சாகரவர்த்தனா" போர்க்கப்பல் 330 தொன் நிறையுடையது; 130 அடி நீளமும் 23 அடி அகலமும் கொண்டது.

2,180 குதிரைவலு இயந்திர சக்தியுடைய இக்கப்பல் மணிக்கு 15 கடல் மைல் வேகத்தில் செல்லக்கூடியது.

25 மி. மீற்றர் இரட்டைப் பீரங்கிகள் இரண்டும் 50 கலிபர் இயந்திரத் துப்பாக்கிகள் இரண்டும் இக்கப்பலில் பொருத்தப்பட்டிருக்கும்;

வழமையாக நான்கு அதிகாரிகளும் 52 கடற்படையினரும் இக்கப்பலில் பணிபுரிவர்.

ஸ்ரீலங்கா கடற்படையின் பயன்பாட்டிலுள்ள வீரயா போர்க்கப்பலைவிட இரண்டு மடங்கு நிறையுடையது இது என்றும் தெரிவிக்கப்பட்டது

புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி சுமார் ஒருமணி நேரத்தில் இக்கப்பல் கடலில் மூழ்கியது. [உ-3]

ஏழுசடலங்கள் இது வரை மீட்பு! 16 கடற்படையினர் தப்பினர்?

தகர்க்கப்பட்ட "சாகரவர்த்தனா" கப்பலில் இருந்த கடற்படையினரில் இதுவரை ஏழு பேரின் சடலங்களே மீட்கப்பட்டிருப்பதாக செய்தி ஏஜென்சிகள் தெரிவித்தன.

இதேவேளை—

தாக்குதலில் தப்பிய 16 கடற்படையினர் மன்னார் தள்ளாடி கடற்கரையை நேற்றுக் காலை வந்தடைந்தனர் என்றும்—

அவர்களில் 12 பேர் தள்ளாடி முகாமிலும்—

ஏனைய நாலவரும் கற்பிட்டி ஆஸ்பத்திரியிலும் சிகிச்சை பெற்று வருவதாக வெளிநாட்டு வானொலியின் சிங்கள சேவையில் அறிவிக்கப்பட்டது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

கப்பல் கப்டன் உட்பட 3 படையினர் பிடிபட்டனர்?

உயிர்தப்பிய படையினரில் கப்பல் கப்டன் உட்பட ஆகக் குறைந்தது மூன்று கடற்படையினரையாவது விடுதலைப்புலிகள் கைதிகளாகப் பிடித்துள்ளனர்.

மேற்படி தாக்குதலில் உயிர்தப்பிய படையினர் இவ்வாறு தகவல் வெளியிட்டதாக பி.பி.ஸி. அறிவித்தது;

கப்பல் தாக்கப்பட்டதை அடுத்து கடலில் மூழ்கிய கடற்படையினர் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் என்றும் அவர்கள் தெரிவித்தனராம்;

நான்கு பீரங்கிகள் அழிப்பு 50கலிபர்கள் இரண்டு மீட்பு

முழ்டிக்கப்பட்ட போர்க்கப்பலில் பொருத்தப்பட்டிருந்த இரட்டைப் பீரங்கிகள் இரண்டும் (மொத்தம் நான்கு பீரங்கிகள்) கப்பல் மூழ்டிக்கப் படுவதற்கு முன்பாகவே கடற்புலிகளால் நாசமாக்கப்பட்டன என்றும் —

கப்பலில் இருந்த 50 கலிபர் இயந்திரத் துப்பாக்கிகள் இரண்டையும் கடற்புலிகள் கைப்பற்றினர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ)

படையினரின் சடலங்களை சுழியோடிகள் தேடுகின்றனர்

தாக்குதலில் சிக்கிய கடற்படையினரைக் காப்பாற்றுவதற்காக கடற் படையினரின் மேலதிக துருப்புகள் மற்றும் கப்பல்களும் அனுப்பப்பட ஹெலிக்கொப்டர்களும் தாக்குதல் நடைபெற்ற இடத்துக்கு விரைந்ததாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தனர்;

அக்கடற் பிரதேசத்தில் உயிர்தப்பிய கடற்படையினரின் சடலங்களைத் தேடும் நடவடிக்கையில் சுழியோடிகள் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் மற்றொரு செய்தி தெரிவித்தது.

தாக்குதல் செய்திக்கு முக்கியத்துவம்

கற்பிட்டி கடலில் போர்க் கப்பலை புலிகள் தகர்த்த செய்தியை உலக செய்தி நிறுவனங்கள் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன.

கடற்படை தாக்கு

தென்மராட்சி, செப். 21

நேற்று அதிகாலை வடமராட்சி பகுதி கடலிலும் வடமாரட்சி கிழக்கு மாமுனை, குடத்தனைப்பகுதி கடலிலும் மீன்பிடிக்கச் சென்ற படகுகள் மீது—

கடற்படைப் பீரங்கிப் படகிலிருந்து சரமாரியாக ஷெல், பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதல் அதிகாலை 3. 15 தொடக்கம் 4. 30 மணிவரை இடம் பெற்றது. (ஒ-117-155)

அலரிமாளிகையில் சந்திரிகா

கொழும்பு, செப். 21

பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா நடந்த புதன்கிழமை உதியோகபூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகையில் குடிபுகுந்தார்.

அப்பேர்து சிறிய சமய நிகழ்ச்சி மட்டுமே இடம்பெற்றது. [இ-எ]

10 ஏப்பாக்கிகள் பிடிபட்டன

கொழும்பு, செப். 21

கந்தானாய் சீனித் தொழிற்சாலைக் கூட்டுத்தாபனத் தலைவரின்—அலுவலை என்ற இடத்தில் உள்ள வீட்டில் இருந்து பத்து துப்பாக்கிகளை பொலிஸார் கைப்பற்றினர் என அறிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணையில் வைக்கப்பட்டுள்ளார். [உ-எ-6]

ரெலோ வேட்பாளர்

கொழும்பு, செப். 21

"ரெலோ" அமைப்பின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக அமைப்புக்கு வெளியில் உள்ள ஒருவரை நிறுத்த அந்த அமைப்பு முடிவுசெய்துள்ளது.

வேட்பாளரைத் தெரிவு செய்ய விசேட குழு ஒன்றை அந்த அமைப்பு அமைத்துள்ளது. (உ-3)

வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு மாதம் ரூ 1,500

கொழும்பு, செப். 21

வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு மாதம் ஆயிரத்து 500 ரூபாவுக்கு அதிகமான நிதி உதவி வழங்க வேண்டும் என்று அரச நடவடிக்கைகளுக்கான குழு நேற்று தீர்மானித்தது.

மூன்று வட்சம் இளைஞருக்கு வேலை வாய்ப்பு. விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவது ஆகிய திட்டங்களைச் செயற்படுத்துவது என்றும் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது [உ-எ-6]

கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், செப் 21

கிளாலி — பூநகரிப் படகுச் சேவை இன்று புதன்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதாகவும் மேலும் விடுதலைப் புலிகளிடம் ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்டதாகவும் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஒ-5)

கடற்புலி மகளிர் படையின் விசேட தளபதியும் வீரச்சாவு

நேற்று முன்தினம் நள்ளிரவு ஸ்ரீலங்கா கடற்படையின் போர்க்கப்பலைத் தகர்த்தெறிந்து வீரகாவியம் படைத்த சாதனையின்போது இரண்டு பெண் கடற் கரும்புலிகளும் மற்றும் கடற் கரும்புலிகளும் தமது இன்னுயிரை தமிழீழத்துக்காக அர்ப்பணித்து வீரச்சாவடைந்தனர். அவர்களின் விபரம் வருமாறு:-

★ லெப்டினன்ட் கேணல் நளாயினி (விசேட தளபதி, கடற்புலி மகளிர் படைப் பிரிவு)

★ மேஜர் மங்கை (கடற்புலி மகளிர் படை)

★ கப்டன் எமகீன்

★ கப்டன் வாமன்

வீரச்சாவடைந்த கடற்கரும்புலி லெப்டினன்ட் கேணல் நளாயினி 1989 இல் விடுதலைப்புலிகளின் இயக்கத்தில் இணைந்து மகளிர் அணியின் 4 ஆம் பயிற்சி முகாமில் இராணுவப் பயிற்சியைப் பெற்றார்.

1990 ஆம் ஆண்டு அரசியல் பிரிவில் கடமையாற்றிய இவர் வவுனியா பூவரசங்குளம் நகர்வட்ட அரசியல் பொறுப்பாளராகவும் —

1991 இல் வவுனியா மாவட்ட மகளிர் அரசியல் பொறுப்பாளராகவும் — செயற்பட்டவர்.

வவுனியா சோளியாபுரப்பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகைத் தாக்குதலை முறியடிப்பதில் முன்னின்றவர் அவர்.

1993 இல் கடற்புலிகள் அணியில் இணைந்து கொண்ட இவர் கடற்புலிகள் மகளிர் படையணியை உருவாக்குவதில் முன்னின்று செயற்பட்டவர்;

தவன நடவடிக்கையின் போது கடற்புலிகள் மகளிர் படையணியில் ஒரு பகுதியை தலைமை தாங்கி நடத்தியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-3)

கடற்படைத் தளபதி விரைவு

கற்பிட்டியில் கடற்படையினரின் போர்க் கப்பல் தகர்க்கப்பட்ட ஒருசில மணித்தியால நேரத்தில் கடற்படையின் கடலோரப்பிரிவுகள் அடங்கிய குழு ஒன்று தாக்குதல் நடந்த இடத்துக்கு விரைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

கடற்படைத் தளபதியும் உடனடியாக அப்பகுதிக்குச் சென்றார் என்று அறிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் குறித்து பூரண விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி கடற்படைத் தளபதியை பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை பணித்துள்ளார்.

கடற்படைத் தளபதி மன்னாரில் தங்கி நின்று மேற்படி தாக்குதல் சம்பவம் குறித்து விசாரணை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது;

யுத்த நிறுத்த அவசியத்தை தாக்குதல் உணர்த்தியுள்ளது

அரசாங்கத்துடன் பேச்சுத் தொடங்க முன்னர் யுத்த நிறுத்தம் கடைப்பிடிக்க வேண்டும் என்று புலிகள் வலியுறுத்தி வந்தனர். ஆனால் இராணுவத்தினர் அதை விரும்பவில்லை. ஏனெனில் இராணுவ ரீதியில் புலிகள் பலவீனப்படடிருப்பதாக அவர்கள் மத்தியில் ஒரு கருத்து நிலவியது. ஆனால் இத்தாக்குதல் மூலம் புலிகள் தமது பலத்தை வெளிப்படுத்தி நிரூபித்துள்ளனர்.

— இவ்வாறு பி.பி.ஸி கொழும்புச் செய்தியாளர், கற்பிட்டி கடற்பிரதேசத்தில் கடற்படைக் கப்பல் தாக்கப்பட்டது குறித்து விசாரணை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது; என்று வானொலியில் குறிப்பிட்டார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

அமைதிக்கான முயற்சியை துரிதப்படுத்தவே தாக்குதல்

தாக்குதல் மூலம் ஆயுதப் படையினரும் மனித்தனர்களை ஏற்படுத்தி, அதன் விளைவாக அமைதி முயற்சியைத் துரிதப்படுத்தவே இத்தாக்குதல் நடத்தப்பட்டது;

பாரிஸ் நகரில் இருந்து விடுதலைப்புலிகளின் சார்பில் கருத்துக் கூறக்கூடிய ஒருவர் இவ்வாறு தெரிவித்ததாக பி.பி.ஸி தெரிவித்தது.

ஆனால் விளைவு நேர்மாறாகக் கூட அமையலாம் என்று:—

இத்தாக்குதல் மேற்கிலை இராணுவ அதிகாரிகளைக் துணுக்குறச் செய்திருப்பதாகவும் பி.பி.ஸி. மேலும் தெரிவித்தது.

தாக்குதல் நடந்தது எப்படி?

வெடிகுண்டு பொருத்தப்பட்ட விசைப்படகு ஒன்று விரைந்து வந்து கப்பலைத் தாக்கியது கடற்படைக் கப்பல் துப்பாக்கிப் பிரயோகம் செய்யத் தொடங்க, வெடிகுண்டு பொருத்தப்பட்ட இரண்டாவது விசைப்படகு வந்து கப்பலுடன் மோதியது;

கடற்படைக் கப்பல் தகர்க்கப்பட்ட சம்பவத்தில் உயிர் தப்பிய கடற்படையினர் இவ்வாறு தகவல் வெளியிட்டதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

இதேசமயம்

மேற்படி இரு விசைப்படகுகளுக்கும் பாதுகாப்பாக வந்த புலிகளின் மற்றைய படகுகள் கப்பல் மீது தாக்குதலைத் தொடர்ந்ததாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் செமுனு குலதுங்க தெரிவித்ததாக வெளிந்தாஸ் வானொலி தெரிவித்தது.

கப்பலிலிருந்த கடற்படையினர் மறுபடி தாக்குதல் நடத்தியபோதும், வெடிகுண்டுத் தாக்குதலினால் கப்பல் நீரில் மூழ்கத் தொடங்கியதாக பிரிகேடியர் குலதுங்க மேலும் குறிப்பிட்டார்.

கப்பல் வடமேற்குப் பகுதியில் ஆழம் குறைந்த கடலில் இப்போது மூழ்கிவிட்டதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

கடந்த சில நாட்களாக மன்னார் கடற்பகுதியில் மீன்வர்த்துறை, வலைகளை கடந்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, வடமேற்கு கடற்பிரதேசத்தில் கடற்படையின் ரோந்துப்பணிகள் முடுக்கி விடப்பட்டன. அவ்வேளை இத்தாக்குதல் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

சமாதான முயற்சிகளுக்கு இந்தியா ஊக்கம் அளிக்கும்

இந்தியாவில் நிலைப்பாடு குறித்து தூதரக அதிகாரிகள்

கொழும்பு, செப் 21

இலங்கை அரசு எடுக்கும் சமாதான முயற்சிகளுக்கு ஊக்கமளிப்பதே இந்தியாவின் நிலைப்பாடாகும்.

கொழும்பில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகளை மேற்கோள் காட்டி சண்டே லீடர் இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

சமாதானத்தையும் இன ஒற்றுமையையும் ஏற்படுத்துவதற்காக இலங்கை அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு ஒத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியார் வைத்தியசாலை கட்டணங்கள் ஒழுங்கமைப்பு

மூவர் குழு நியமனம்

கொழும்பு, செப். 21

தனியார் வைத்தியசாலைகளிலும் தனியார் மருத்துவமனைகளிலும் நோயாளர் களிடமிருந்து அறவிடப்படும் கட்டணங்கள் ஒழுங்கமைக்கப் பட உள்ளன.

இதுதொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு மூவர் குழு ஒன்றை சுகாதார சமூக சேவைகள் அமைச்சர் ஏ. எச். எம். பௌஸி நியமிக்க உள்ளார்.

இரு ஒய்வு பெற்ற மருத்துவ நிர்வாக அதிகாரிகளையும் நீதிபதி ஒருவரையும் கொண்டதாக இந்தக் குழு அமையும்.

அமைச்சர் பௌஸி, இது தொடர்பாக கடந்த சனிக்கிழமை பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில், பல தனியார் வைத்தியசாலைகளும், மருத்துவமனைகளும் அதிகளவு கட்டணங்களை நோயாளர்களிடமிருந்து அறவிடுவதாகவும் —

முறையான பராமரிப்போர் உள்ள நிர்வாகமோ இன்றி இந்த வைத்தியசாலைகள் இயங்குவதாகவும் —

தாதிமாராகவும் மருத்துவ விநியோகராகவும் தராதர மற்றவர்கள் பணிபுரிவதாகவும் — பொதுமக்களிடமிருந்து பெருமளவு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தெரிவித்தார்.

கொழும்பு - 4 இல் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் ஒன்றரை நாட்கள் மாத்திரம் தங்கி இருந்த ஒரு பிரசவம் மூலம் பிள்ளை ஒன்றைப் பெற்றெடுத்த தாயார் ஒருவரிடம் கட்டணமாக 9,495 ரூபா அறவிடப்பட்டதாகவும் அமைச்சர் பௌஸி கூறினார்.

அப்பெண்ணிடம் குறிப்பிட்ட மருத்துவமனை 5,795 ரூபாவுக்கான பற்றுச் சீட்டை முதலில் வழங்கியது என்றும் —

முழுத்தொகைக்கான பற்றுச் சீட்டை வழங்கும்படி அந்தப் பெண் கேட்டபோது 5,700 ரூபாவுக்கான இன்னொரு பற்றுச் சீட்டு வழங்கப்பட்டதாகவும் அமைச்சர் பௌஸி மேலும் தெரிவித்தார். (இ)

BLACK AND WHITE

FILMS, PAPERS AND CHEMICALS

★ FORTEPAN (POST CARD) SIZE PAPER
★ FORTEPAN (12x10 SIZE) PAPER
★ FORTEPAN (POST CARD SIZE) SHEET FILM
★ FORTEPAN (2B SIZE) SHEET FILM
★ BLACK AND WHITE CHEMICALS

என்பவற்றை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கலக்சி புகைப்பட சேவை
337/1, முதலாம் மாடி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
[சி-9214]

BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L 95 DAY CLASS

(பாடசாலை செல்லாத மாணவர்களுக்குரிய வகுப்பு)

பொருளியல்	— எஸ். வரதராஜன்
வர்த்தகம்	— பகில்
கணக்கியல்	— சொந்தி
அளவையியல்	— எஸ். எஸ். மனோகரன்
தமிழ்	— திருமதி மீரா
இந்துநாகரிகம்	— பாலா
புவியியல்	— சேரன்
அரசியல்	— பஞ்சாக்ஷரம்
கிறிஸ்தவம்	— நிரஞ்சன்

ஆரம்பம்: 29-09-1994
வியாழன் 8 a m.

[இ-9183]

50வ ஆது நாள் நினைவஞ்சலி

செல்வி பவவேந்திரன் அபிராமி
(ஆண்டு 1, வீரசிங்கம் ம. வி. மீசாலை)

அபிராமி! நினது குறுநகையும்
கண் சிமிட்டும் இனிய காண்போமா?

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
(32980) வீரசிங்கம் ம. வி. மீசாலை.

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
மருதனார் மடம்
கல்விக் கோட்டப் பிரிவு

தியாகி திலீபனின் 7ஆவது ஆண்டு நினைவு நாள்

இடம்: இணுவில் மத்திய கல்லூரி
காலம்: 21 — 09 — 1994 புதன்கிழமை
மாலை 4 மணிக்கு

நினைவு நாள் நிகழ்வுகள்:
01. தியாகி திலீபனின் திருவுருவப் படத்திற்கு சுடரேற்றல்
02. தமிழீழ தேசியக் கொடி ஏற்றுதலும், தேசியக் கொடிக் கீதம் இசைத்தலும்
03. தியாகி திலீபனின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை சூடி மலர் அஞ்சலி செலுத்தல்
04. தலைமை உரை: நா. பாலகிருஷ்ணன்
05. வரவேற்புரை: விக்கினேஸ்வரன்
06. நினைவுப் பேருரை:
உயர்திரு ஆறுமுகம் மாஸ்டர் (தமிழீழ கல்விக் கழகம்)
திரு. செழியன் (தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு வலிகாமம்)
07. இயக்குநர் ஆசிரியர் சார்பில்:
குகதாசன் (குடாநாட்டு கல்வி நிலையம்)
மாணவர்கள் சார்பில் உரை நிகழ்த்துவோர்:
1. செல்வி கிஸாயினி கிருபாமூர்த்தி (மினர்வாஸ் கல்வி நிலையம், சுன்னாகம்)
2. செல்வன் தயாபரன் (மினர்வாஸ் கல்வி நிலையம், சுன்னாகம்)
08. மாணவர் கலை நிகழ்ச்சிகள்
09. இராஜன் இசைக் குழுவினரின் விடுதலைக் கீதங்கள்
10. நன்றியுரை: நவராசா (கலைமகள் கல்வி நிலையம்)

இந்த நினைவு எழுச்சி நாள் நிகழ்வுகளில் மக்கள் அணி திரண்டு கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இப்படிக்கு,
தியாகி திலீபன் 7ஆவது ஆண்டு நினைவு எழுச்சி நாள் நிகழ்வுக் குழுவினர்.
[7646]

இன்று முதல் கொடுப்பனவு

தென்மராட்சி, செப். 21

தென்மராட்சிப் பிரதேசத்தில் காசநோய், தொழுநோய், புற்றுநோய் ஆகியவற்றால் பாதிக்கப் பட்டவர்களுக்கான செப்டெம்பர் மாதக் கொடுப்பனவு இன்று புதன் முதல் பிரதேச செயலக நிதிப்பிரிவில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [ஒ-117]

விஜே கொலையுண்ட தினத்தை தேசிய விடுமுறை தினமாக்குக!

சந்திரிகாவுக்கு ஒலி கடிதம்

கொழும்பு, செப். 21

விஜேகுமாரதுங்க படுகொலை செய்யப்பட்ட தினமான செப்ரவரி 16 ஆம் திகதியை தேசிய விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்தும்படி பிரதமர் சந்திரிகாவுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

விஜேகுமாரதுங்க ஞாபகார்த்த நிதியத்தின் தலைவர் என்றமுறையில் ஐ.தே.க. எம். பியான ஒலி அபயகுணசேகரா பிரதமருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் இக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

விஜேகுமாரதுங்கா பிரதமர் சந்திரிகாவின் கணவரானார்.

சந்திரிகாவின் தந்தையரான முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் மறைவுதினமான செப்ரெம்பர் 26 ஆம் திகதியை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு மீண்டும் விடுமுறை தினமாக இவ்வாண்டு முதல் பிரகடனம் செய்திருப்பது தெரிந்ததே. (இ-எ)

வடக்கு- கிழக்குக்கு மின்சாரம் வழங்க ரூபா.100 கோடி தேவை

கொழும்பு, செப். 21

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு மீண்டும் மின்சாரம் வழங்க மைல் 100 கோடி ரூபா தேவைப்படுகிறது என்றும் — வெளிநாட்டு உதவி இதற்குப் பெறப்பட வேண்டும் என்றும் இலங்கை மின்சார சபையின் அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-எ)

அகதிகளை மீளக்குடியமர்த்தும் போது இனவிகிதாசாரம் கடைப்பிடிக்கப்படும்

அமைச்சர் தாமசிறி கூறுகிறார்

கொழும்பு, செப் 21

அகதிகளை மீளக்குடியமர்த்தும் போது அவர்கள் முன்னர் குடியிருந்த பகுதிகளில் இருந்த இன விகிதாசாரம் பேணப்படும்.

அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா முன்னுண்டவாறு தெரிவித்தார்.

1983 வன்செயலுக்குப்பின் வீடிழந்து இடம் பெயர்ந்தவர்கள் உண்மை இடம் பெயர்ந்தவர்கள் அவரின் விவரங்களும் திரட்டப்பட்டு வருகின்றன என்றும்—

மூன்று வாரங்களில் இப் பணி முடிவடைந்து விடும் என்றும் — தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

அனுராவை நாடு திரும்ப தாயார் அவசர செய்தி

கொழும்பு, செப். 21

இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முதல் நாடு திரும்பும்படி அமெரிகா சென்றுள்ள அனுரா பண்டாரநாயக்காவுக்கு தாயார் சிறிமாவோ அவசரச் செய்தி அனுப்பியிருக்கிறார்.

அடுத்த மாதம் கொழும்பு திரும்புவது என்று அனுரா முன்பு திட்டமிட்டிருந்தார். தாயாரின் அழைப்பை அடுத்து அனுரா எதிர்வரும் 24 ஆம் திகதி கொழும்பு திரும்புவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

செப்டம்பர் 26 ஆம் திகதி அமரர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் நினைவு தினமாகும் அன்றைய தினம் மீண்டும் ஒன்று சேர இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

ஹேமாவிடம் ஆதரவு கோருகிறார் காமினி

கொழும்பு, செப். 21

ஜனாதிபதித் தேர்தலில் தம்மை ஆதரிக்கும்படி ஹேமா பிரேமதாஸாவைச் சந்தித்து காமினி திஸநாயக்கா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அப்போது காமினியுடன் அவரது மனைவி சிறிமா திஸநாயக்காவும் சென்றிருந்தார்.

பிரேமதாஸா ஜனாதிபதியாக இருந்த சமயம் அவரை பதவியில் இருந்து அகற்ற அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணை ஒன்றை அவருக்கு எதிராக லலித் அதுலத்முதலியுடன் சேர்ந்து காமினியும் கொண்டு வந்தார் என்பது தெரிந்ததே.

எவர் போட்டியிட்டாலும் சந்திரிகாவுக்கே வெற்றி

கருத்துக் கணிப்பில் தெரிவிப்பு

கொழும்பு, செப். 21

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகாவை காமினியாலோ, ரணிலாலோ தோற்கடிப்பது முடியாத காரியம் என்று கருத்துக் கணிப்பு ஒன்றில் தெரியவந்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் தூண்டுதலாக கருதப்படும் பிரமுகர் ஒருவரே இக் கணிப்பை நடத்தியிருக்கிறார் என்று 'சண்டே லீடர்ஸ்' பத்திரிகை வெளியிட்டுள்ளது.

தாம் வெற்றியீட்டுவது கடினம் என்று தெரிந்தும் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட காமினி முன்வந்திருப்பது, நவம்பர் தேர்தலில் வெற்றியீட்டுவதற்காக அல்ல என்றும் —

அதற்கு பிறகுவரும் தேர்தலில் வெற்றியீட்டுவதற்கு ஒரு தளமாக இத் தேர்தலில் காமினி போட்டியிடுகிறார் என்றும் 'சண்டே லீடர்ஸ்' அரசியல் செய்தியாளர் கூறியுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் சந்திரிகாவின் பலத்தை மேலும் உறுதிப்படுத்தும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்குக் காரணம் சுதந்திரக்கட்சி சிங்கள பேரினவாதப் போக்கைக் கைவிட்டு, உண்மையான தேசியக்கட்சி என்ற அந்தஸ்தைப் பெற்று வருவதேயாகும்.

அதேவேளை தேசியக்கட்சி என்ற தோற்றத்தை ஐக்கிய தேசியக்கட்சி முறியடித்துவிட்டது —

இப்படி ஆக் கணிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

தொண்டா போகட்டும் என்கிறார் விஜேதுங்கா

கொழும்பு, செப். 21

தொண்டமான் போகட்டும் — ஜனாதிபதி விஜேதுங்க இப்படிக் கூறிவிட்டார்.

ஐக்கிய தேசியக்கட்சியுடனான கூட்டி இருந்த தொண்டமான் விலகப் போகிறார் என்ற செய்தியை ஜனாதிபதியிடம் அவரது சகாக்கள் தெரிவித்த போதே அவர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தவிடயம் சண்டே லீடரில் வெளியிட்டுள்ளது. (இ-எ)

ராஜீவ் காந்தி நினைவாக 7 தூண்கள் எழுப்பப்படும்

ஸ்ரீபெரும்புதூரில் ராஜீவ் காந்தி உயிர் நீத்த இடத்தில் 7 நினைவுத் தூண்கள் எழுப்பப்படவிருக்கின்றன.

இதற்கான அடிக்கல் நாட்டு விழா இன்று 20 ஆம் திகதி நடைபெறும். [illegible] ராஜீவ் காந்தியின் மனைவியார் சோனியா காந்தி நாட்டுவார்.

ராஜீவ் காந்தி 21 - 5 - 91 இல் வெடிகுண்டு வெடித்து மரணமானது தெரிந்ததே.

நினைவுத் தூண்களைக் கட்டுவதற்கான புனித மண் டெல்லியிலிருந்து கொண்டு வரப்படுகிறது. அத்தோடு [illegible] நினைவு [illegible] இந்திய காங்கிரஸ் முடிவு செய்துள்ளது. [ஈ]

மணற்காட்டுப் பகுதியில் சிற்றுண்டிச்சாலை இன்றி உல்லாசப் பயணிகள் சிரமம்

யாழ்ப்பாணம், செப். 21

வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதியில் சிற்றுண்டிச்சாலை இல்லாதிருப்பதால் அங்கு செல்லும் சுற்றுலாப் பயணிகள் பெரும் சிரமப்படுகின்றனர்.

இதேவேளை வடமராட்சி நோக்கிவரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

கண்ணீர் அஞ்சலி

முன்னாள் ஓய்வுபெற்ற அதிபர்
பண்டிதர் செ. சிவலிங்கம் அவர்கள்

பச்சைப்குறிச் சாக்கை, பார்வையிலே கவிவு சொரி
இச்சையுடன் நீசெய்த சேவையினை மறப்போமா?
வித்தகனே! விஞ்ஞானம் கலைமிளிர விரிக்கும்(து)
உத்தமனாய் உயிரளித்தாய் உள்ளத்தில் ஒளிர்ந்திடுவாய்.

அதிபர், ஆசிரியர், மாணவர்
செ. ஆ. சபை,
வீரசிங்கம் ம. வி. மீசாலை.
(32979)

5 ஆம் ஆண்டு நினைவலைகள்

வைத்திய கலாநிதி
திருமதி
றஜனி திரணகம

கண்ணீர்த் தூறல்கள்

நல்லாசானாய்
நடுநிலை வாதியாய்
சொல்லால் மட்டுமின்றி
செய்கையிலும் செய்த தாயே!
ஐந்து ஆண்டுகள் ஆகின்ற பின்னும்
அழியாத நினைவுடன் — இதயத்
தூரிகையால் தாயவளுக்கு — எம்
துயர் பிடித்த நெஞ்சுடன்
துவட்டாத கண்ணீர்
தூறல்கள்

மருத்துவ மாணவர் ஒன்றியம்

இன்று காலை 7 மணிவிளவில் மருத்துவபீடத்தில் நடைபெறும் பிரார்த்தனைக் கூட்டத்தில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
(33989)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு: 10 — 11 — [illegible]
மறைவு: 22 — 08 — 1994

அமரர் தம்பிராசா சிவலிங்கம்

எமது குடும்பத் தலைவர் அமரர் தம்பிராசா சிவலிங்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று புதன்கிழமை (21-09-1994) எமது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நடைபெற்ற அன்று, நேரில் சமுகந்தந்தும், அனுதாபம் தெரிவித்தும், பலவழிகளிலும் எமக்கு உதவிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

ஓம் சாந்தி!

திருமதி சரோஜினிதேவி சிவலிங்கம்
[மனைவி]
சிவகுமரன் [மகன்]

குப்பிளான் தெற்கு,
ஏழாலை. [32986]

A/L DAY CLASSES
வர்த்தகப் பிரிவு
(A/L 94 பரீட்சை எடுத்த மாணவர்கட்குரியது)

ஆரம்பம்
23 - 9 - 94
வெள்ளி — 8-00 A. M

COM. — Mr. பசில்
ACC. — Mr. சௌந்தி
ECON
Mr இராஜேஸ்வரன்
LOGIC. — Mr. சர்மா

SHAMROCK
யாழ். சுண்டுக்குளி
(32982)

அச்சுவேலியில் நாய்களுக்கு தடுப்பு ஊசி

அச்சுவேலி, செப். 21

அச்சுவேலிப் பகுதியில் நாளை வியாழனும், மறுநாள் வெள்ளியும் வளர்ப்பு நாய்களுக்கு வெறி நோய்த் தடுப்பு ஊசி ஏற்றப்படும்.

கோப்பாய் பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலக பகுதியில் உள்ள சமூக நிலையங்கள், வைத்தியசாலை உட்பட 8 நிலையங்களில் வைத்து வெறி நோய்த் தடுப்பு ஊசி ஏற்றப்படவுள்ளது. (ஒ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடாளுமன்றில் இ. தொ. கா. தனிக்குழுவாக இயங்கும்

கொழும்பு, செப். 21

நாடாளுமன்றத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எம்.பிக்கள் தனிக்குழுவாகவே இயங்குவர் என்று சபாநாயகருக்கு அறிவிக்கும்படி ஐ.தே.க. பொதுச் செயலாளரை இ.தொ.கா. தலைவர் தொண்டமான் கேட்டுள்ளார்.

கடந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலை ஒட்டி ஐக்கிய தேசியக் கட்சியும் இ.தொ.காவும் செய்து கொண்ட உடன்பாட்டின்படி, இ.தொ.காவை தனித்துச் செயற்பட ஐ.தே.க. அனுமதிக்க முடியும்.

பொ. ஐ. மு. அரசுடன் தொண்டா சேர முடியாது

காமினி விஜேசேகரா கூறுகிறார்

கொழும்பு, செப். 21

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசுடன் திரு. தொண்டமான் சேர்ந்தால் பொருத்தமாக நடவடிக்கையை எடுக்க வேண்டி நேரிடும்.

இவ்வாறு ஐ.தே.க. பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா தெரிவித்தார்.

இருகட்சிகளுக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாட்டின்படி நாடாளுமன்றத்தில் இ.தொ.கா தனிக் குழுவாகச் செயற்பட முடியும் ஆனால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான ஒரு கட்சியில் சேருவதற்கு இ.தொ.காவுக்கு உரிமை கிடையாது. அப்படிச் சேர்வது தேர்தல் உடன்பாட்டுக்கு எதிரானதாகும் என்றும் ஐ.தே.க. பொதுச் செயலாளர் தெரிவித்தார்.

தொண்டமான் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுடன் சேர்வார் என்று ஊகம் தெரிவிக்கப்பட்டாலும் அவர் தொடர்ந்து ஐ.தே.க.வுக்கு ஆதரவளிப்பார் என்று திடமாக நம்புவதாகவும் டாக்டர் விஜேசேகரா தெரிவித்தார். (இ-எ)

இறக்குமதிப் புத்தகங்கள் மீதான தீர்வை ரத்தாகும்

கொழும்பு, செப். 21

இறக்குமதி செய்யப்படும் புத்தகங்கள் மீதான தீர்வையை ரத்துச் செய்யும் சாத்தியம் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

பிரதமர் சந்திரிகாவின் உத்தரவின்மீது இப்பரிசீலனை இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகவலை வெளியிட்ட கலாசார, மதவிவகார அமைச்சர் லக்ஷமன் ஜெயக்கொடி, இறக்குமதியாகும் புத்தகங்களுக்கு தற்போது அதிக பட்ச தீர்வை விதிக்கப்படுவதாகக் குறிப்பிட்டார்.

"அறிவுக்கு வரி விதிக்கக் கூடாது. உள்ளூர் புத்தக வெளியீட்டுத் துறையை பாதிக்காது புத்தகங்கள் மீதான இறக்குமதித் தீர்வை அகற்றப்பட்டாக வேண்டும் என்றும் அவர் கூறினார். (இ-எ)

போட்டிப் பரீட்சை மூலமே அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு

பொது நிர்வாக அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, செப். 21

அரசசேவைக்குப் போட்டிப் பரீட்சைகள்மூலமே புதிய நியமனங்களையும் பதவி உயர்வுகளையும் தொடர்ந்து மேற்கொள்ளவுள்ளதென பொது நிர்வாக அமைச்சு தீர்மானித்துள்ளது.

எதிர்காலத்தில் பதவியுயர்வுகள் சேவை மூப்பின் அடிப்படையில் வழங்கப்படும் தகுதிக்கு முடியாத சந்தர்ப்பங்களில் மட்டும் பதவி உயர்வுகள் தெரிவு அடிப்படையில் வழங்கப்படும் என்று பொது நிர்வாக அமைச்சர் ரட்னசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்தார். (ஐ-எ)

கோழிகள் மரணம்

தென்மராட்சி, செப். 21

சாவகச்சேரிப் பகுதியில் ஒரு வகை நோயினால் பாதிக்கப்பட்டு கோழிகள் பல தினமும் உயிரிழக்கின்றன.

அறிகுறி நிலையும் கடும் வெப்பத்தின் காரணமாகவே கோழிகள் இறப்பதாக தெரிவிக்கப்படுகிறது. [ஐ-117]

இலகுவான மருத்துவ நூல்கள் தமிழில் வெளிவர வேண்டும்

நூல் வெளிட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், செப். 21

"சாதாரண மக்களும் நோய்கள் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ள உதவும் இலகுவான முறையில் எழுதப்பட்ட மருத்துவ நூல்கள் தமிழ்மொழியில் வெளிவர வேண்டும் டாக்டர் சீர்மாறனின் நூல் வெளியீடு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பணியாகும்."

வைத்திய கலாநிதி பி. ஆர் சீர்மாறனின் 'சில நோய்களும் சில ஆலோசனைகளும்' மருத்துவ நூல் வெளியீட்டு விழாவில் பயிய தமிழ் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. தமிழ்ச்செல்வன் இவ்வாறு கூறினார்.

நூல்வெளியீட்டு விழா கடந்த 14 ஆம் திகதி கலாசாலை பதி கலைரங்கில் நடைபெற்றது. விழாவுக்கு யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் எஸ். வி. மாரடேஸ்வரன் தலைமை வகித்தார்.

திரு. தமிழ்ச்செல்வன் மேலும் கூறியதாவது.

இது போன்ற பல நூல்கள் தமிழில் வெளிவர வேண்டும் அதற்கு எமது அமைப்பு ஒத்தமைப்பு நல்கும்! டாக்டர் சீர்மாறன் புத்தகம் வெளியிடுவதுடன் மட்டும் நிற்கவில்லை எல்லா மக்களுக்கும் சிறந்த சேவையையும் வழங்கி வருகின்றார்.

எமது சமூகத்தைக் காக்க வேண்டும் என்ற சிந்தனையுடன் எமது வைத்தியர்கள் சேவையாற்றுகிறார்கள்.

பல்வேறு சமூகங்களின் மத்தியிலும் கூட ஆசியாவில் சிறந்த வைத்திய நிலையம் யாழ்ப்பாணம் வைத்திய நிலையம் என்று வெளிநாடுகள் கூறும் அளவிற்கு அங்கே பணியாற்றும் வைத்தியர்கள் சேவை செய்கிறார்கள் என்று அவர் கூறினார்.

பேராசிரியர் மாரடேஸ்வரன் தமது தலைமை உரையில் கூறியதாவது:

எமது பகுதியில் மருத்துவ நூல்கள் எழுதப்படுவது மிகவும் அரிது. பேராசிரியர் நந்தி, வைத்திய கலாநிதி முருகானந்தம் ஆகியோர் சில நூல்களை எழுதியுள்ளார்கள் தெளிவாக, உறுதியாக இலகுவாக சாதாரண அறிவு கொண்டவரும் புரிந்து கொள்ளத் தக்கதாக புதிய கோணத்தில் ஆக்கப்பட்ட டாக்டர் சீர்மாறனின் இந்த முயற்சிக்கு தமிழ் சமுதாயம் மிகவும் கடப்பாடுடையதாகும்.

நூலை வெளியிட்டு வைத்துப் பேசிய யாழ் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் கூறியதாவது:

எந்த ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் அதன் சுகவாழ்வுக்கும் அதற்கு இணங்வே திரு. தொண்டமான் ஐ.தே.க. பொதுச்செயலாளர் டாக்டர் காமினி விஜேசேராவுக்கு முன்கண்ட வேண்டுகோளை விடுத்திருக்கிறார்.

இதன்படி ஐ.தே.க. தலைமைப்பீடம் சபாநாயகருக்கு இதுபற்றி அறிவிக்கும் வரை, சபாநாயகர் அழைக்கும் சமித்த தலைவர்களின் மாநாட்டிலோ —

நாடாளுமன்ற தெரிவுக்குழு அமர்வுகளிலோ — இ.தொ.கா. எம்.பிக்கள் தனிக்கட்சி ஒன்றின் உறுப்பினர்களாகக் கலந்துகொள்ள முடியாது என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

புலிகளின் குரல் வானொலியில்

21 — 09 — 1994

புதன் இரவு

★ 8-01 — தியாகதீபம் செப்டிஎன்பர் சேனை நினைவின் 7ஆம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — ஜெராட் எழுதிய "புயலிடம் நீதி கேட்ட பூங்காற்று"

★ 8-20 — ஏர்முனை — நிகழ்ச்சியில் "நீர் முகாமைத்துவம்" குறுநடகம்

8-30 — செய்திகள்

★ 8-40 — நாடகம் — செந்தமிழ்க்கோன் எழுதிய "தண்ணீர்"

22 — 09 — 1994

வியாழன் காலை

★ 7-02—மாவீர வணக்கம்

★ 7-15 — விடுதலை கீதங்கள்

★ 7-30—செய்திகள்

★ 7-35—பத்திரிகைச் செய்திகள்

★ 7-40 — தியாகதீபம் செப்டிஎன்பர் சேனை நினைவின் 7 ஆம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — சி. கண்ணமா எழுதிய "தேவனில் எழுந்த எதிர்".

விடமைப்பு அதிகாரசபையின் மாகாண அலுவலகம் மூடப்படுகிறது

வவுனியாவிலுள்ள வடக்குக்கான தேசிய விடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாகாண அலுவலகம் எதிர்வரும் முதலாம் திகதியுடன் மூடப்படவிருக்கிறது.

வவுனியாவிலுள்ள வடக்கு மாகாண அலுவலகம் மூடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-51)

வடக்கு மாகாணத்தலைநகர்களுக்கும் மாகாணமுதலமையாளர் திரு. வே. ஸ்ரீகந்தராஜா அறிவித்துள்ளார்.

தேசிய விடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவரது 19-01-22இலக்க விநியோகத்தலுக்கு ஆதரவாக எதிர்வரும் முதலாம் திகதியுடன் மேற்படி மாகாண அலுவலகம் மூடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியைபதவி விலக பிரேரணை கொண்டு வருக!

ந. ச. ச. கட்சி கோருகிறது

கொழும்பு, செப். 21

ஜனாதிபதியைப் பதவி விலகுமாறு கோரும் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றும்படி பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை நவசமசமாஜக் கட்சி கோரியுள்ளது.

ந.ச.க.பொதுச்செயலாளர் டாக்டர் விக்ரபாகு கருணாரத்னா விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு கோரியுள்ளார்.

தற்போதைய நாடாளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்றுவது என்ற பிரேரணையையும் அரசு நாடாளுமன்றத்தில் உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்றும் அவர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ-எ)

விற்பனைக்கு

சகல அளவுகளிலும் பொலித்தீன்தாள், சொப்பிங் பாக், நயிலோன் கயிறு, பிளாஸ்டிக் ஜக், பிளாஸ்டிக் வாட்டர்ஜக், பிளாஸ்டிக் பேசின், கோழிக்கூட்டுக்கான இரும்புவலை, அலுமினியத் தாச்சி, எனாமல் பெயின்ற் மொத்தமாகவும் சிறிதளவாகவும் விற்பனைக்குண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.

நாதன் கஞ்சியம்,
213.C சேணன் கிட்டு சாலை,
மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

(32967)

பாராட்டு விழா

இணுவில் மேற்கு வட்டுவிணிப்பதியில் 12 நாட்கள் தேவிபாகவத தொடர் விரிவுரையாற்றிய ஆசிரியர்

திரு. செ. சத்யமூர்த்தி

அவர்களுக்கு

இன்று (21-09-1994) பிற்பகல் 5மணியளவில் பாராட்டு விழா நடைபெறும்

ஆசியுரைகள்:

சிவஸ்ரீ இ. ஸ்ரீதரக்குருக்கள்
சிவஸ்ரீ சா. சுந்தரேசக் குருக்கள்
சிவஸ்ரீ இ. சுந்தரசிவாசாரியக்குருக்கள்
சிவஸ்ரீ சா. சோமசுப்பிரமணிய குருக்கள்
சிவஸ்ரீ மு. ஜெயந்திநாதக் குருக்கள்

பாராட்டுரைகள்:

பிரம்மஸ்ரீ பா. வசந்தசர்மா
திரு. ஆ. மகாலிங்கம்
(பிரதேச செயலர்)
திரு. இரா. சுந்தரலிங்கம்
(முன்னாள் கல்விப் பணிப்பாளர்)
திரு. சபா. ஜெயராஜா
(தலைவர் நுண்கலைத்துறை யாழ். பல்கலைக் கழகம்)

பதிலுரை:

ஆசிரியர் செ. சத்யமூர்த்தி

நன்றியுரை:

சிவஸ்ரீ கா. மகாதேவக்குருக்கள்
(தேவஸ்தான ஆர்ச்சகர்)

இப்படிக்கு,
திரு. செ. திருவிளங்கம்,
ஆலய தர்மபரிபாலகர்,

[32972]

இதய அஞ்சலி

வைத்தியத்துறையில் மட்டுமன்றி இசைத்துறையிலும் மிகுந்த ஆர்வமும், ஈடுபாடுடையவரும், புல்லாங்குழல் இசைப்பதில் வல்லவரும், இசைப்பயிலும், எமது சபாவில் இசை பயிற்றுவரும், சிறந்த இசை ரசிகனுமாகிய

அமரர் டாக்டர்

சுப்பிரமணியம் பொன்னம்பலம்

அவர்களின்

மறைவு இசைத்துறைக்கும் இசைக் கலைஞர்களுக்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும்

அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போடு, அன்னாரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இசை ஆசிரியரும், இசை மாணவர்களும்,
பாரதி கான சபா,
126/1, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

(32973)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

ஆடைவைக்க உகந்த சிக்கி, பாபடிக்கல்ஸ், ஹப்பு பாமால், வெள்ளை பாமால், ஜாவா பண்டம் முதலிடங்கள் விற்பனைக்கு உண்டு. இல. 1, தவக்குமார் வீதி, மடத்தடி (தூபி அருகில்) சங்கத்தானை, சாவகச்சேரி. [32974]

உடன் விற்பனைக்கு

Hyline வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள், டிறொயிலர் கோழிகள் விற்பனைக்குண்டு. நா. ஸ்ரீகாந்தன், இல: 703. கே. கே. வீதி, சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். [32977]

தேவை

அனுபவமும், திறமையும் உள்ள விற்பனையாளரும், உதவியாளர்களும் தேவை; உதவியாளர் வயதில் குறைந்தவர்கள் விரும்பத்தக்கது. நேரில் தொடர்பு கொள்ளவும். யாழ். நகர் வோர்க் கிறிசிலம், இல. 441. காங்கேசன்துறை வீதி [சிவன் கோயிடி வடக்கு வீதி], யாழ்ப்பாணம். [32965]

தமிழில் பிழை எழுதி புடைவை வியாபாரம் செய்யக்கூடிய பெண்ணை ஒருவர் தேவை. நேரில் வரவும். த. சங்கரப்பிள்ளை அன்ஸன்ஸ், இல. 81, மக்கள் நவீன சந்தை, மிச்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (32975)

தவறிவிட்டது

பகவதி மகேந்திரா, புகைகுடி நிவு என்று விலாசமிடப்பட்ட ஆடையான அட்டையும், முக்கிய ஆவணங்களும் அடங்கிய வேலிஸ் யாழ். நகரில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஒப்படைக்கவும் இல. 11, செம்மணி வீதி, நல்லூர். சன்மானம் வழங்கப்படும். [32976]

பூச்சிக்கொல்லி

பூச்சிக்கொல்லி [இன்செக்டிசைட்] மலத்தீவிலும் சிறந்தது; கறையான், எறும்பு, கொறவன் போன்ற சில பூச்சிகளையும் கட்டுப்படுத்த சிறந்தது. கண்ணாடி, மக்கள்வங்கி முன்பாக, விராலி வீதி, யாழ்ப்பாணம். [சி-9148]

ஆனந்தம் சீயாக்காய்

தலைமயிரின் தன்மையை பேணுவதற்கு வேண்டிய மூலிகைகளுடன் சீயாக்காய் சேர்த்த சித்தமருந்து நிபுணர் ஆலோசனைப்படி தயாரிக்கப் பெற்றது. ஆனந்தம் சீயாக்காய் பவுடர். பேன், சொடுகு, அழுக்கு முற்றாக அகற்றி கவர்ச்சி தருகிறது. கேட்டு வாங்குங்கள் ஆனந்தம் சீயாக்காய் பவுடர். (சி-9035)

சோதிடம்

கல்வியில் சிறந்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவசாயம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமாறு? வெளிநாடு போகலாமா? கேட்டுப்பாருங்கள். த. கிவானந்தன், பிரபல சோதிடர், ஆனந்தா சோதிட நிலையம், விராலி வீதி [ஸ்ரீதர் தியேட்டர் முன்பாக], யாழ்ப்பாணம். தினமும் காலை 8-30 — 12-30; தலைமை 384, கோயில் வீதி, நல்லூர் வடக்கு. பிற்பகல் 3 00 — 6-00. [32969]

ஆண்டு 7 கணிதம்

ஆண்டு 7 மாணவர்கள் பரீட்சையில் சிறந்த பயனடைய சிறந்த வழிகாட்டி. தலைமை முன்றாம் உரிய 17 வினாப் பத்திரங்களை உடையது. உதயன் வெளியீடு. எல்லாப் புத்தக நிலையங்களிலும் விற்பனையாகின்றது. [32958]

வணிகமும் நீதியும்-I

பண்டைச் சந்தையும் நடைமுறை விடயமும், வணிகமும் நீதியும் - II நடைமுறை விடயம் உட்பட 40 தலைப்புக்களின் குறிப்புகளும் வினாக்களும் விற்பனையாகின்றன. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-9155)

வேப்பம், இலுப்பம் விதை

சுத்தமான வேப்பம் விதை, இலுப்பை விதை வாங்குகிறோம். ஆண்ணா சோப்பிக் கடைகளிலும் கொடுக்கலாம். "மிக்கவைத்" (சி-9204)

கலை, வர்த்தக கல்லூரி

C. C. A.

மணிக்கூட்டுவீதி
யாழ்ப்பாணம்.

A/L 94

பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான பகல் நேர வகுப்புக்கள் (Day Class)

புதிய பிரிவு ஆரம்பம்:
29 - 09 - 1994
காலை 8 மணிக்கு

எமது வழமையான ஆசிரியர் குழு

குறிப்பு:
மாணவர்தன் ஏனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

- நிர்வாகி

(சி-9179)

ஷெல் விச்சில் காயம்

தெல்மராட்சி, செப். 21 வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் உடுத்துறைப்பகுதியில் வீழ்ந்து வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்தார் முன்று வீடுகள் சேதமடைந்தன ஞாயிறு நண்பகல் இச்சம்பவம் இடம் பெற்றது (இ-117)

பதவியேற்காத பட்டதாரி பயிலுநருக்கு

யாழ்ப்பாணம், செப். 21 வலயம் - I கல்விக் கோட்ட அலுவலகங்களுக்கும், பாடசாலைகளுக்கும் கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டவர்களில் கடிதங்களைப் பெற்ற பின்பும் இதுவரை நிரவுக்களுக்கு சமுகமளிக்காத பட்டதாரி பயிலுநர்களை இன்று 21 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் நிரவுக்களுக்கு சமுகமளிக்குமாறு வலயம்- I கல்விப்பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி அறிவித்துள்ளார். சமுகமளிக்கத் தவறுமிடத்து அவர்களின் சம்பளக் கொடுப்பனவுக்கான நடவடிக்கைகளில் தாமதம் ஏற்படும் என்பதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஜ)

டிறிபேக் கல்லூரியில் ஆங்கில தினவிழா

சாவகச்சேரி, செப். 21 சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் ஆங்கில தினவிழா கல்லூரி அதிபர் உ. சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் பிரதம விருந்தினராக தெல்மராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஸ்பா கணேசலிங்கமும் விசேட விருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆங்கிலம்) டி. ஆர். அருமைநாயகமும் கலந்து கொண்டனர், ஆங்கிலத்தினப் போட்டிகளில் தெரிவான மாணவர்களின் சான்றிதழ்களை பிரதிக் கல்விப்பணிப்பாளர் வழங்கினார் மாணவர்களின் கவை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (இ-31)

இரு மாதங்களுக்கு ஒரு முறை நடைபெறும்

மாபெரும் வெற்றிப் போத்தல் பரிசு குலுக்கல் போட்டியில் பரிசு பெறும்

அதிர்ஷ்டசாலிகளின் இலக்கங்களும் பெயர்களும் வருமாறு:

1ஆம் பரிசு:	8808	மணிக்கூட செல்வி ப. செல்வநாயகம் 595, நிலவர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
2ஆம் பரிசு:	11537	எவர் சில்வர் பொருள்கள் நா. சு நடராசா (S m) அராலி வடக்கு, வல்லுக்கோட்டை
3ஆம் பரிசு:	6248	T சேட் சு. அம்பிகைராஜா 82/4 Stanley Road, Jaffna.

ஆறுதல் பரிசுகள்

1ஆம் பரிசு-	6280	குடை V. ஞானேஸ்வரன் ஏழாலை மேற்கு, ஏழாலை.
2ஆம் பரிசு:	532	தொப்பி/சாப்பாட்டுப்பெட்டி வி. காமராஜ் ஏழாலை மேற்கு, சுன்னாகம்.
3ஆம் பரிசு:	7521	அல்பம் V. கமலாகரன் 6, யாழ் வீதி, யாழ்ப்பாணம்.
4ஆம் பரிசு:	8972	பாடசாலைப் பை நிசாந்தன் செல்லுட் அவனியு,முள்ளி வீதி, அரியாலை.
5ஆம் பரிசு:	9204	பிளாஸ்டிக் வாளி ஏ. ஜெய்வேந்திரராஜா அரசடி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
6ஆம் பரிசு:	8978	எனர் சிலவர் பேணிகள் நிசாந்தன் செல்லுட் அவனியு, முள்ளி வீதி, அரியாலை.
7ஆம் பரிசு:	7463	கை மணிக்கூட A. ராசலிங்கம் 61/2, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.

3ஆவது சீட்டிழுப்பு நவம்பர் 15ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) 1994இல் நடைபெறும். இன்றே உங்கள் போத்தல்களை எம்மிடம் விற்று உங்கள் அதிர்ஷ்டத்தை பரீட்சித்துப் பாருங்கள்.

ரேட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட்

14, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (சி-9212)

மோதிரம் தவறிவிட்டது - சன்மானம்

1½ பவுன் திருமண மாற்று மோதிரம் 18-09-1994 அன்று காலை பலாலியிலிருந்து ஸ்கூட்டரில் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த சமயம் தவறி விட்டது. இது ஒரு திருமண வைபவ மாற்று மோதிரம் ஆகையால் எனது மனம் வேதனையுற்றுக் கொண்டிருக்கிறது. இதன் உட்புறத்தில் 04 - 04 - 1984 என்றும் வெளிப்புறத்தில் S. Deva என்றும் பொறிக்கப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவு கூர்ந்து சி. சுந்தரலிங்கம் கிருஷ்ணா மர அரிவு ஆலை
கண்டி வீதி, பலாலி
என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும், இதன் பெறுமதியான பணத்தையே சன்மானமாக தரவுள்ளேன்.

சி. சுந்தரலிங்கம்,
பலாலி.

[32978]

NEW MASTER INSTITUTE

B. M. C. LANE. JAFFNA.

DAY CLASSES

பகல் நேர விஞ்ஞான வகுப்புகள்

(94 A/L) பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான

ஆரம்பம்: 29 09-1994 வியாழன்
நேரம்: 8·00 — 2·00

விபரங்கள் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

(சி-9193)

யாழ். றோட்டறிக் கழகம்
கல்விப் பரிவர்த்தனைக் குழு

GROUP STUDY EXCHANGE

of the Rotary Foundation of Rotary International

சர்வதேச றோட்டறியின், றோட்டறி நிதியத்தின் ஆதரவிலான கல்விப் பரிவர்த்தனைக் குழுத் திட்டத்தின் கீழ் இலங்கை றோட்டறி மாவட்டத்தின் சார்பில் செல்லும் 4பேர் கொண்ட கல்விப் பரிவர்த்தனைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ நிரந்தரமான தொழிலிலுள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், நிர்வாக தொழிநுட்ப அலுவலர்கள், அரச கற்றும் தனியார் வங்கி அலுவலர்கள், தனியார் துறை அலுவலர்கள் ஆகிய இதுபோலும் விண்ணப்பிக்கலாம்.

★ விண்ணப்பதாரிகளது உயர் கல்வித்தகைமை, தொழிற்றுறைத் தகைமை ஆங்கில மொழியில் சரளமாகப் பேசும், எழுதும் ஆற்றல் என்பன கவனத்திற் கொள்ளப்படும்.

★ வயதெல்லை இல்லை, சுற்றுலாக்காலம் 4முதல் 6வாரங்கள் கல்விப் பரிவர்த்தனைக் குழு செல்லும் நாடு இதுவரை அறிவிக்கப்படவில்லை.

✱ றோட்டறக்ற் கழக உறுப்பினர்களும் விண்ணப்பிக்கலாம் றோட்டறிக்கழக உறுப்பினர்களின் குடும்பத்தினர் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்களாவர்.

யாழ் றோட்டறிக்கழகம் சார்பில் இருவர் தெரிவு செய்யப்பட்டு மாவட்ட தேர்வுக் குழுவிற்கு சிபார்சு செய்யப்படுவர். இறுதித் தேர்வு கொழும்பில் றோட்டறி மாவட்ட தேர்வுக் குழுவினரால் நடத்தப்படும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரியின் பிரயாணச் செலவினை றோட்டறி நிதியமும், சுற்றுலாக் காலத்திலான செலவினை உபசரிக்கும் றோட்டறி மாவட்டமும் பொறுப்பேற்கும்.

மேதிக விவரங்களுக்கும், விண்ணப்பப் படிவங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

Rtn, ஈ. சரவணபவன்
தலைவர் யாழ். றோட்டறிக் கழகம்,
மே/பா. உதயன் பணிமனை,
யாழ்ப்பாணம்.

Rtn. எஸ். சோதிலிங்கம்
சர்வதேச சேவை இயக்குநர்
யாழ். றோட்டறிக் கழகம்,
மே/பா ஹற்றன் நஷனல் வங்கி,
யாழ்ப்பாணம்.

விண்ணப்ப முடிவு திகதி: 1994 - 09 - 28

Rtn. தி. திருநந்தகுமார்,
செயலாளர், யாழ் றோட்டறிக் கழகம்

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-9213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

கனதியான அழுத்தம்

✱ வடக்கு - கிழக்கு மாகாணத்தின் புனரமைப்புக்காக வழங்கப்படும் நிதியை, அந்த மாகாணத்தின் புனருத்தாரண வேலைகளுக்கே பயன்படுத்த வேண்டும்.

— எக்காரணம் கொண்டும் அந்த நிதியை வேறு இடங்களின் தேவைகளுக்குச் செலவிடக் கூடாது.

★ வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரை, ஏனைய பகுதிகளில் வாழும் நிட்டங்களை மேற்கொள்ள நிதி உதவி வழங்கப்படலாகாது.

ஸ்ரீலங்கா அரசுக்கு இந்த இரண்டு நிபந்தனைகளையும் உலக வங்கி விதித்திருப்பதாக அதன் வதிவிடப் பிரதிநிதி றொபேர்ட்டோ பெஜோரோ தகவல் வெளியிட்டிருக்கிறார்.

சமுப்போர் — இரண்டு தொடர்பில் கடந்த நான்கு வருடங்களில் மட்டுமன்றி, அதற்கு முன்னரும், 1983ஆம் ஆண்டு தொடக்கமே — உலக வங்கி போன்ற சர்வதேச நிதி நிறுவனங்கள் உலகிடை இரோப்பிய நாடுகள் மற்றும் இலங்கைக்கு உதவும் நாடுகள் வழங்கிய நிதி உதவிகளைத் தமிழ்ப் பகுதிகளின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தாமல் இராணுவம் அரசு தனிர்த்துக் கொண்டது.

வடக்கு - கிழக்கு பகுதிகளுக்கென குறிப்பொதுக்கப்பட்ட நிதியற்றும் தொழிற்துப்பு உதவிகளைக்கூட அந்த அரசு தமிழ்ப் பிரதேசங்களின் நலனுக்குபயன்படுத்தவில்லை.

வடக்கு கிழக்கில் பாதுகாப்பு நிலைமை சீராக இல்லாததாலே புனருத்தாரண மற்றும் புனர்வாழ்வுத் திட்டங்களையோ அபிவிருத்தித் திட்டங்களையோ நடைமுறைப்படுத்த முடியவில்லை என்று கூறி அந்த நிதி வளங்களை தெற்கில் அபிவிருத்திக்குப் பயன்படுத்தியது. அது மட்டுமா? வெளிநாட்டு நிதி உதவிகளைப் போர்ச் செலவுக்காகவும் விழுங்கிக் கொண்டது!

சமுப்போர் — இரண்டு ஆரம்பமான பின்னர் ஸ்ரீலங்கா அரசுக்குக் கிடைத்த கோடானு கோடி ரூபாவில் ஒரு வெள்ளிச்சதம் கூட தமிழ்ப்பகுதி மக்களின், குறிப்பாக வடபகுதி மக்களின் புனர்வாழ்வுக்கோ, புனருத்தாரணத்துக்கோ, அபிவிருத்திக்கோ கூற விரவில்லை. ஆனால் அந்தப் பணத்தில் பெரும்பகுதியைக் கொண்டே தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்!

இதனைத் தெற்றுதும் தெரியாதது போல, இலங்கைக்கு உதவும் நாடுகள்குழு ஸ்ரீலங்கா அரசாங்கம் கேட்ட தொகை எயிட கூடுதல் பணத்தை நிதி உதவியாக வழங்கியதும் உண்டு! ஐரோப்பிய நாடுகளும் அவ்வாறே செய்தன.

ஆனால் உலக வங்கி கடந்த ஒன்றரை வருடங்களாக ஸ்ரீலங்கா அரசுக்கு கடன் உதவி ஏதனையும் வழங்கவில்லை. வடக்கு- கிழக்கிற்கென தான் வழங்கிய நிதியை ஸ்ரீலங்கா அரசு உரியவாறு இப்பகுதியின் அபிவிருத்திக்குப் பயன்படுத்த விரும்பவில்லை என்பதைக் கண்டு பிடித்தோ என்னவோ!

புதிய அரசுக்கு விநியோகிக்கும் நிபந்தனைகள் அந்தக் கண்டுபிடிப்பின் பெறுபேறாகவே இருக்கலாம் என்று கருத இடமுண்டு. வங்கியின் நிபந்தனைகள், புதிய அரசுக்கு எச்சரிக்கையாக விளங்கும் என நம்பலாம்.

சிறப்பாக, இரண்டாவது நிபந்தனை போரை முடிவுக்குக் கொண்டு வந்து இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அரசியல் அழுத்தமாகவும் இருக்கிறது.

அதனை முன்னுதாரணமாகக் கொண்டு, உலக வங்கியைப் பின்பற்றி, ஸ்ரீலங்கா வுக்குநிதி உதவி வழங்கும்நிறுவனங்களும், நாடுகளும் இனப் பிரச்சினையைத் தீர்க்க அழுத்தம் கொடுப்பதாகவும் அமையும்

வடமராந்திய போக்குவரத்துச் சபை

ஊழியர்களுக்கும்
ஏனைய பொதுமக்களுக்கும்
அன்பான அறிவித்தல்

தியாகி லெப்.கேணல் திலீபன் அவர்கள்

15-09-87 தொடக்கம் 26-09-87 வரை
தேசத்தின் விடுதலைக்காய் தேகத்தை உருக்கி வீரச் சாவடைந்த 7 ஆம் ஆண்டின் 8 ஆம் நாளினை நினைவில் நிறுத்தி வடமராந்திய போக்குவரத்துச் சபை அனைத்து ஊழியர்களையும் ஏனைய பொதுமக்களையும் (இன்று) 21-09-94 காலை 7 மணிக்கு யாழ்ப்பாணம் நல்லூர் வீதியில் நடைபெறும் உண்ணாவிரதத்திலும் ஏனைய நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டி கொள்கிறோம்.

தமிழ் பேசும் போக்குவரத்து
ஊழியர் சங்கம்

வ.பி.போ. சபை,
கொண்டாவில்; [32990]

மரண அறிவித்தல்கள்

திருமதி முத்துத்தம்பி இராசம்மா

வேலணை கிழக்கு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்பொழுது 54, சப்பல் வீதியில் வசிப்பவருமான திருமதி முத்துத்தம்பி இராசம்மா 20.09.94 இல் காலமானார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
பொ. கருணாநந்தன்
(பேரன்)

54, சப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.

(32988)

சுப்பிரமணியம் குமாரவேலு

(இளைப்பாறிய அதிபர் நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் குமாரவேலு 18.09.94 இல் நெடுந்தீவில் காலமானார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும், கேதீஸ்வராவி, கோகிலகுமாரி, யெகவனகுமாரி, உதயகுமார், காஞ்சன்ற விநோத்குமார் [கப்டன் மதன்/இந்திய] ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியை 16.09.94 அன்று நெடுந்தீவில் நடைபெற்றது.

தகவல்:
கு. உதயகுமார்
(மகன்)

(32985)

உரும்பராய் வடக்கு

கந்தையா சிவஞானம்

(இளைப்பாறிய பிரதம சிறுப்பர்- உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலய அதிபர் நிதிசைவ உப-தலைவர்- உரும்பராய் வடக்கு உற்பத்திக்குழுத் தலைவர்- வலி- கிழ- தென்பகுதி- பல, நோ, கூ, சங்க உரும்பராய் சந்திக் கிளை 23 முன்னாள் தலைவர்- நெறியாளர்குழு உறுப்பினர்- சங்க உப- தலைவர்- உரும்பராய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்- பெற்றோர் ஆசிரியர் சங்கங்களின் முக்கிய உறுப்பினர்) 20-9-94 இல் காலமாகிவிட்டார்.

இவர் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், சிவகுமாரன் (விமானநிலையம் பலாலி-வட்டுநாயக்கா முன்னைநாள் கட்டடமேற்பார்வையாளர், தோரணவே) சிவவேல் (ஜேர்மனி), சிவராம் (நீதிமன்ற உத்தியோகத்தர் வவுனியா), சிவசங்கர் (முன்னை நாள் விற்பனை அபிவிருத்திச்சபை வழிகாட்டி, லண்டன்), சிவதாஸ் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையாரும், காலம்சென்ற சோமசுந்தரம் - இராஜலக்ஷ்மி பிள்ளை, காலம்சென்ற கிருபாகரன் (மலேசியா), சிவசம்பு (மலேசியா), ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
திருமதி சிவஞானம் மங்கையர்க்கரசி,
பிள்ளைகள்

(32983)

மாணிக்கம் ஜோசப் (தம்பிப்பிள்ளை)

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணம் இல. 15/19, மத்தியூஸ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் ஜோசப் அவர்கள் நேற்றுக் காலமானார்.

இவர் ஆனாட்சி பாக்கியத்தின் அன்புக் கணவரும், அன்ரன் பாலதாஸ் (யாழ் / பல்லைக்கழகம்), றோஸ் பெலிக்ஸ்ரர், பொன்றோஸ், ராணி, புவனராஜேஸ்வா. ப. நோ. கூ. சங்கம்), மெயிலி றோஸ்கிறஸ்யா (யா / புனித மரியாள் வித்தியலயம்), ஞானதாஸ் நல்லூர் ப. நோ. கூ. சங்கம்) ஆகியோரின் அருமைத் தகப்பனாரும், எமிலியா ஜூட், செல்வரட்ணம் (தலைவர் யா / ப. தெ. வள. அ. கூ. சங்க சமாசம்), வீனஸ் (யா. ப. நோ. கூ. சங்கம்), ஜெயதாஸ் துரைராசா (யா. ப. தெ. வள. அபி. கூ. சங்கம்), அலெக்ஸ் அமலரட்ணம் (நல்லூர் ப. நோ. கூ. சங்கம்), தர்மினியசி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஞானம்மா, ஆசீர்வாதம், மரியம்மா, மரியதாஸ் ஆகியோரின் மைத்துனரும் வெலிச்சோரின் சகலனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21-9-94) பிற்பகல் 3.30 மணியளவில் புனித மரியாள் பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டபின் புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
J. அன்ரன் பாலதாஸ்
(மகன்)

15 / 19, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம். (32987)

இப்பத்திரிகை நடு கதுவன் யப்பிலிருந்து (பிறைவேற்) விமிடெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 323/3 இல் அமைந்துள்ள அச்சகத்தில் 21-09-1994 இல் வெளியிடப்பெற்றது.

தியாகி திலீபனின் நினைவு நாள்

குடாநாட்டில் எழுச்சியுடன் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், செப். 21

தியாகி திலீபனின் ஏழாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நேற்று ஆறாவது நாளாக — குடாநாடு முழுவதும் — எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

நல்லூரில் நேற்று நடந்த கடையான உண்ணாவிரத நிகழ்வில் யாழ். மாநகரசபை ஊழியர்கள், பொதுமக்கள் பிரம்படி, கோண்டாவில் குமாரகோட்டம், கோண்டாவில் அமரபதி சனசமூக நிலைய உறுப்பினர்களும், கோண்டாவில் இந்து மகளிர் வித்தியாலயம், பொற்குளம் ஞானபண்டிதர் பாடசாலை, கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்களும், ஆசிரியர்களும், அத்திவடி மாதர் சங்க உறுப்பினர்களும் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

கடையான உண்ணாவிரத நிகழ்வின்போது பல்வேறு நிகழ்ச்சிகளும், பாடசாலைப் பிள்ளைகளின் பேச்சு, கவிதை போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

திலீபன் நினைவொட்டி அலங்கரிக்கப்பட்ட கோட்டை

தபால்களை சேர்க்குக!

யாழ்ப்பாணம், செப். 21

நாளை வியாழக்கிழமை பருத்தித்துறைக்கு வந்த திரும்பும் பிளாம்பயான் கப்பலில் கப்பலில் வெளியூர் தபால் பொதிகள் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்படுகின்றது;

இதற்கு ஏதுவாக நாளை காலை 8 மணிக்கு முன்னதாக யாழ். பிரதம தபாலகத்தினுள் இருக்கும் தபால் பெட்டியில் வெளியூர் தபால்களைச் சேர்க்குமாறு பிரதம தபால் அதிபர் கேட்டுள்ளார்.

(ஒ-4)

கொழும்பு செல்லும் தோயாவுக்கு

யாழ்ப்பாணம், செப். 21

நாளை வியாழக்கிழமை கொழும்பு செல்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களையும் கூடச் செல்பவர்களையும் இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு மற்றும் தண்ணீருடன் அன்று காலை 7.00 மணியளவில் யாழ். பொது வைத்தியசாலைக்கு வருமாறு கோரப்பட்டுள்ளது. (இ)

அமைப்பினால் வார்த்தை நேற்றுக் காலை (பச்சிலைப்பள்ளியிலிருந்து புறப்பட்டு தெல்மராட்சி பகுதிகளுக்கு எடுத்து வரப்பட்டு நண்பகலுக்குப் பின்னர் வடமராட்சிப் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டது.

பொதுமக்களும் வர்த்தகர்களும் மாணவர்களும் ஊர்தியில் உள்ள திலீபனின் உருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினர்.

அந்தவேளி பஸ் நிலையத்தில் தியாகி திலீபன் வரலாற்றுக்காட்சிச்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி சிற்றூர்திச் சேவைச்சங்கம் அமைத்துள்ள காட்சிச்சாலையில் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாறு பேடிநிலை; தியாகி திலீபனின் பாராட்டானவாறு மற்றும் தலைவர்கள் அடிவலை வரைகளும், வரைவுகளாகவும், குறிப்புக்களாகவும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி தேர்தல்கள்

கொழும்பு, செப். 21

ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்த பிரதமர் சந்திரிகா திட்டமிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது' (இ-எ)

லயனல் இந்தியா பயணம்

கொழும்பு, செப். 21

தலைவர் ஒலிவரப்பு அமைச்சர் செயலாளர் லயனல் பெர்னாண்டோ தமது மனைவியுடன் இந்தியா சென்றுள்ளார்.

இவ்வார முடிவிலே அவர் கொழும்பு திரும்புவார்.

இந்தியாவில் தங்கியிருக்கும் போது, லயனல் திரு பெர்னாண்டோ இந்திய மத்திய வதிரதின் சில உயர் அதிகாரிகளைச் சந்திக்கக் கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுகளின் போது இலங்கை அரசின் பிரதிநிதியாக திரு. லயனல் பெர்னாண்டோ கலந்து கொண்டார் என எதிர்பார்க்கப்படுகிறது

பண்டா நினைவு தினத்தில் மகளின் பிரசாரம் ஆரம்பம்

கொழும்பு, செப். 21

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடும் பிரதமர் சந்திரிகா குமாரதுங்கவின் தேர்தல் பிரசாரம் எதிர்வரும் 26 ஆம் திகதி — காலஞ்சென்ற எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் சிராத்த தினமன்று — ஆரம்பமாகும்.

தேர்தல் பிரசார வேலைகளுக்கு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை பொறுப்பாகச் செயற்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காமினியின் பிரசாரத்துக்கு பொறுப்பாக மூவர் குழு

கொழும்பு, செப். 21

ஜனாதிபதி தேர்தலில் ஐ. தே. க. வேட்பாளர் காமினி திசாநாயக்காவின் பிரசார இயக்கத்தை நடத்தும் பொறுப்பு மூன்று பேரைக்கொண்ட குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

டாக்டர் விக்ரம வீரசூரியா, தஹம் விமலசேன, கு. மொ. வி. முன்னாள் தலைவர் ரஸிக் சரூக் ஆகியோரே அக்குழுவில் உள்ளனர்.

தற்போது ஆன்டிரேலியா சென்றுள்ள டாக்டர் வீரசூரியா விரைவில் கொழும்பு திரும்புவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே — ஐ.தே.க.வின் ஆதரவு இயக்கங்களை நிறைவேற்றுவதற்கு அடுத்த மாதம் முதலாம் திகதி கூடி சுதந்திர நிலை நாயக்காவின் வேட்பாளர் நியமனத்தை அங்கீகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது இக்கூட்டத்திலே 1 ஆயிரம் பிரதிநிதிகள் வரையில் கலந்து கொள்வர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது (உ-எ)

கற்பிட்டிக் கடலில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

முற்றாக மூழ்கடிக்கப்பட்டது.

கப்பலில் மூழ்கடிக்கப்பட்ட இந்த நாக்குதலில் கடற்படையைச் சேர்ந்த 53 பேர் உயிரிழந்திருக்கக் கூடும் என்று கருதப்படுவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் செமுனு குணதுங்க மேற்கோள்காட்டி "வெரிதாஸ்" வானொலி அறிவித்தது

கப்பலில் சுமார் 41 பேர் வரை மரணம் செய்திருக்கலாம் —

இவர்களில் 16 பேர் வரை மீட்கப்பட்டதாகவும் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சேனக பிரனுருத்த ரத்வத்தை தெரிவித்தார்.

இந்தாக்குதலில் குறைந்தது நான்கு கடற்படை அதிகாரிகள் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் கருதப்பட்டது.

ஏழு சடலங்கள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விக்கப்பட்டது

ஆனால் உயிர் தப்பிய 14 கடற்படையினர் விமானம் மூலம் கொழும்பில் உள்ள மருத்துவமனைக்கு எடுத்து வரப்பட்டதாக பி.பி.சி. அறிவித்தது.

இத் தாக்குதலில் உயிரிழந்த கடற்படையினரின் எண்ணிக்கை சரியாக எவ்வளவு என்பது குறித்து திட்டவட்டமான தகவல்கள் வெளியாகவில்லை.

கடற்படையினர் 56 பேர் இத் தாக்குதலில் உயிரிழந்திருக்கலாம் என கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்திய வானொலி நேற்று முற்பகலில் அறிவித்தது.

ஆனால் இத் தாக்குதலில் 19 கடற்படையினரே உயிரிழந்தனர் என்றும்—

52 கடற்படையினர் காயப்படுத்தப்பட்டனர் என்றும்—

இராணுவ செய்தியாளர் தகவலையடுத்து அறிக்கை தெரிவித்தது.

யா/ வண்ணை கலட்டி

திருவருள் மிகு கற்பக விநாயகர் திருக்கோவில்
மண்டலாபிஷேக பூர்த்தி நவோத்தர ஷகஸ்ர
சங்காபிஷேக (1008) விஞ்ஞாபனம்

காலம்: இன்று 21-09-1994 புதன்கிழமை
காலை 8 மணி முதல் 11-30 மணி வரை

12-00 மணிக்கு விசேட பூஜை
1-00 மணிக்கு மகேஸ்வர பூஜை (அன்னதானம்)
மாலை 5.00 மணிக்கு வசந்தமண்டப பூஜையும் திருவூஞ்சலும்
சுவாமி வீதிவலம் வருதலும் நடைபெறும்.

ஷகஸ்ர சங்காபிஷேக குரு
வேதாகம கிரியா மணி
சிவஸ்ரீ நா. யோகீஸ்வரக்குருக்கள்

நிகழ்ச்சிகள்:
விசேட பேளக்கச்சேரி இடம்பெறும்

நிர்வாக சபையினர்

[32981]

5 உறுப்பினர்கள் விலக்கப்பட்டனர்

கொழும்பு, செப். 21

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசில் இருந்த 5 உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் விலக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் கட்சியிலிருந்து விலக்கப்படுவது தொடர்பாக அதன் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான ஜனாப் ஹாரிஸ் சமர்ப்பித்த உறுப்பினர்களுக்கும், சபைகளின் செயலாளர்களுக்கும். தேர்தல் ஆணையாளருக்கும் அறிவித்துள்ளார்.

(ஒ-4)

எம். பிமாருக்கு பிரதமர் தீர்வு முயற்சி பற்றி விளக்கம்

கொழும்பு, செப். 21

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு எடுக்கும் முயற்சிகள் குறித்தும் —

அரசுக்கும் — விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடக்கும் சமாதானத் தொடர்புகள் குறித்தும் —

பிரதமர் சந்திரிகா குமாரதுங்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நேற்று விளக்கி இருந்தார் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் —

அரசுக்கு ஆதரவு வழங்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈ.பி.டி.பி., முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் சார்பில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களையும் —

ஆலிமாளிகையில் நேற்று பிரதமர் சந்திக்க இருந்தார்.

இந்தக் கூட்டத்திலேயே பிரதமர் மேற்கண்ட விடயங்கள் குறித்து விளக்க இருந்தார் என்றும் —

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகவும் அவர் எடுத்துத் தெரிவிக்க இருந்ததாகவும் கூறப்பட்டது.

(உ-3)

ஜனாதிபதித் தேர்தல்:

தமிழ்க் கட்சிகளின் ஆதரவு ரெலோவுக்கு கிடையாது

கொழும்பு, செப். 21

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதாக தெரிவித்துள்ள ரெலோவுக்கு ஆதரவளிப்பதில்லை என கொழும்பில் உள்ள தமிழ்க்குழுக்கள் சில தெரிவித்துள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிக்கப்போவதாக ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட் ஆகிய குழுக்கள் தீர்மானித்துள்ளன.

ஈ.பி.டி.பியும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஜனாதிபதித் தேர்தல் பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியான பின்னரே இதுபற்றி தீர்மானிக்கப் போவதாக அறிவித்துள்ளன.

தமிழர்களிடையே ஒன்று ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது கேலிக்கூத்தான செயலாகும் என்று ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்த தெரிவித்தார்.

(இ-எ)

கொழும்பில் தமிழ்ப்பெண் கத்தியால் குத்திக் கொலை

5 நாட்களின் பின் சடலம் மீட்பு

கொழும்பு, செப். 21

கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் மர்மவிடுதியொன்றில் விலைமகளாக வசித்து வந்த செல்வி ஞானேஸ்வரி கந்தையா என்ற தமிழ்ப்பெண் மர்மமான முறையில் கத்தியாலே குத்திக் கொல்லப்பட்டார்.

இவர் முன்னாள் ஊர்காவற்றுறை எம்பியான வீ. ஏ. கந்தையாவின் புதல்வியாவார்.

யுத்த...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அமைதிப் பேச்சு நடத்த இரு தரப்பினரும் இணக்கம் தெரிவித்திருக்கும் நிலையில் இந்தத் தாக்குதல் நடத்திருப்பது கூ.பி.பி.சி.செய்தியாளர் கட்டிக்காட்டினார்.

அமைதிப் பேச்சுக்கு புத்த நிறத்தம் ஆலோசனை என்னைத் இந்தாக்குதல் உணர்த்திருப்பதாக அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

இதேவேளை —

தீர்வுக்கான பேச்சுக்களைத் தொடங்கும் அரசின் நிலப்பிடிப்பை இத் தாக்குதல் நடவடிக்கை பெரிதாகப் பாதிக்காது என்று முப்படைகளின் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் செமுனு குணதிலகா பி.பி.சிக்குத் தெரிவித்தார்.

அரசியல் ரீதியான தீர்வு காண்பதில் ஏற்படக்கூடிய முன்னேற்றங்களைத் தடுக்கும் தந்திரமாக இத் தாக்குதல் புலிகள் நடத்திருப்பார்களா என்று கேட்டதற்கு—

கப்பல் தகர்ப்பு வெறும் இராணுவ தந்திரமே என்றும் அரசியல் நடவடிக்கையை அது மாற்றாது என்றும் அவர் பதிலளித்தார்.

இராணுவம் போர் நிறுத்தத்தை விரும்புகிறதா என்ற கேள்விக்கும் பதிலளிக்கையில் —

இராணுவம் கட்சியை நிறுத்தினாலே தடுக்கும் எவரும் அமைதியையே விரும்புவர். ஆனால் சமாதானத்தை அடைவதற்கான எந்த முயற்சியையும் இராணுவம் ஆதரிக்கவே செய்யும் — என்றார். (அ)

சமாதானம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

துவழப்பு வழங்குவதாக இந்தியா உறுதியளித்திருப்பதாகவும் கொழும்பில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் தெரிவித்தனர்.

"சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு நாம் இலங்கை அரசுக்கு ஊக்கமளித்து வருகின்றோம்" — என்று இந்தியத் தூதரக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது உள்நாட்டு விவகாரம் ஆனால் இந்த அழகிய தீவில் அமைதி நிலவ வேண்டும் என்று இந்தியா விரும்புகிறது. அதனால் இலங்கை அரசின் சமாதான முயற்சியை நாம் அக்கறையுடன் கவனித்து வருகின்றோம் — என்றும் இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-எ)

மண்ணெண்ணெய் இம்முறை 3 லீற்றர்

யாழ்ப்பாணம், செப். 21

மாஹோர் கப்பலில் எடுத்து வரப்பட்ட மண்ணெண்ணெய் குடும்பம் ஒன்றுக்கு 3 லீற்றர் என்ற அடிப்படையில் வழங்கப்படவுள்ளது.

பக்கேட்டு அட்டைக்கு லீற்றர் 23 ரூபா வீதம் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படும்.

(ஒ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org